# கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## அரச புலமைப்பரிசில் ஊடாக உலகின் உயர் தரப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கல்வி பயிலுங்கள் – உயர் தரத்தில் சிறப்பான வகையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் அரிய வாய்ப்பு!



**“வளமான நாடு - அழகான வாழ்க்கை”** எனும் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்திற்கமைய கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் சிறப்பான வகையில் சித்தியடைந்துள்ள 200 மாணவர்களை வலுவூட்டுவதற்காக அவர்களுக்கு **கீர்த்திமிக்க, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர் தரப்படுத்தலின் கீழான வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் ஆரம்பப் பட்டப் படிப்பை பயிலுவதற்கான வாய்ப்பை** ஏற்படுத்திக் கொடுப்பதற்காக இந்த சிறப்புப் புலமைப்பரிசில் திட்டம் பெருமிதத்துடன் ஆரம்பிக்கப்படுகின்றது.

**“நன்னடத்தையுடைய பிரஜை - மேம்பட்ட மனித வளம்”** இனை உருவாக்குவதற்கான நோக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்தத் திட்டத்தின் ஆரம்ப கட்டமாக அமைச்சினால் **2026** கல்வியாண்டுக்காக சுமார் **25 - 50** மாணவர்களுக்கு அரசாங்கத்தினால் நிதி வழங்கப்படும் புலமைப்பரிசில் வாய்ப்புகள் வழங்கப்படும். ஐந்து வருட காலப் பகுதியினுள் **மொத்தமாக 200 புலமைப்பரிசில்கள்** வரை வழங்குவதனை இலக்காகக்கொண்டு, வருடாந்த அடிப்படையில் புலமைப்பரிசில் பெறுபவர்களின் எண்ணிக்கையை **2025- 2029** வரை முறையாக அதிகரிக்கப்படும்.

### 1. விண்ணப்பங்களைக் கோரல்:

I. 2024 க.பொ.த. உயர் தரம் பரீட்சையில் சிறப்பான வகையில் சித்தியடைந்த மாணவ மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும்.

II. அனைத்து கற்கைத் துறைகளையும் சேர்ந்த மாணவ, மாணவிகள் விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்கின்றனர். எவ்வாறாயினும், உலகளாவிய ரீதியில் முன்னேறிவரும் துறைகள் /இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் தற்போது கற்பதற்கான வாய்ப்பு இல்லாத துறைகள்; முக்கியமாக நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கான சாத்தியங்களைக் கொண்டுள்ள துறைகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

III. கீழ் குறிப்பிடப்படும் உலகளாவிய பல்கலைக்கழகங்கள் தரப்படுத்தல் குறிகாட்டியில் முதல் 500 இடங்களுக்குள் தரப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச பல்கலைக்கழகமொன்று மற்றும் தாம் விரும்புகின்ற பட்டப் பாடநெறியொன்றை இனங்கண்டுகொள்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

- ✓ **QS உலக பல்கலைக்கழக தரப்படுத்தல் குறிகாட்டி**
- ✓ **டைம்ஸ் உயர் கல்வி (THE) உலக பல்கலைக்கழகங்கள் தரப்படுத்தல் குறிகாட்டி**
- ✓ **உலக பல்கலைக்கழகங்களின் கற்கைகள் தரப்படுத்தல் குறிகாட்டி (ARWU) - ஷங்ஹய் தரப்படுத்தல்**

### 2. விண்ணப்பங்ளை சமர்ப்பித்தல் மற்றும் தெரிவு செய்யும்

**நடைமுறை:**

**கட்டம் I:**

விண்ணப்பதாரிகள் தாம் விரும்பும் பட்டப் பாடநெறியை **இனங்கண்டு,** மேலே குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் சர்வதேச பல்கலைக்கழகமொன்றைத் தெரிவு செய்துகொள்வதனை எதிர்பார்க்கப்படுகின்றது.

**கட்டம் II:**

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, **உங்களுடைய விண்ணப்பத்தை** கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் இணையவழி விண்ணப்ப வலைவாசலுக்கு அனுப்பவும்.

I. விண்ணப்பதாரிகள் **https://foreignscholarships.mohe.gov.lk** இணைப்பி (Link) ஊடாக பிரவேசித்து அமைச்சின் வலைவாசலில் (Online Portal)பிரவேசக் கணக்கொன்றை (Login Account) உருவாக்கிக்கொள்ளல் வேண்டும்.

II. **இணையவழி விண்ணப்பப் படிவம் மற்றும் மேலதிக தகவல்களை** அமைச்சின் இணையதளம் ஊடாக பதிவிறக்கம் செய்துகொள்வதற்கு முடியும். **www.mohe.gov.lk, www.moe.gov.lk**

III. இந்த அமைச்சுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2025 செப்டெம்பர் 15 ஆகும்.

IV. தேவையான அனைத்து விபரங்களுடன் இணையவழி விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தல் வேண்டும்.

V. விண்ணப்பங்களை அமைச்சின் இணைய வலைவாசல் **(Online Portal) ஊடாக மாத்திரம் அனுப்பப்படல் வேண்டும். தபாலில் அனுப்பப்படும் வன் பிரதிகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

**கட்டம் III:**

I. விண்ணப்பதாரிகள் பிரதானமாக கல்விசார் திறமை அடிப்படையில் சுருக்கப் பட்டியல் (Shortlist) படுத்தப்படுவார்கள். இங்கு தேசிய மற்றும் மாவட்ட திறமைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

II. சுருக்கப் பட்டியல்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**கட்டம் IV:**

I. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஊடாக தெரிவு செய்யப்படும் மாணவ, மாணவிகளுக்கு தாம் தெரிவு செய்த பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்து பிரவேச வாய்ப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

II. தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட **தெரிவு பற்றிய கடிதத்தை (Placement Letter)**சமர்ப்பித்து மற்றும் **பிணைமுறி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன்** பின்னர் புலமைப்பரிசில் வழங்கப்படும்.

கட்டம் I
சர்வதேச பல்கலைக்கழகத்தை மற்றும் பட்டப் பாடநெறியை **இனங்காணவும்.**
↓
கட்டம் II
அமைச்சின் விண்ணப்ப வலைவாசல் (OnlinePortal) ஊடாக விண்ணப்பிக்கவும்.
↓
கட்டம் III
நேர்முகப் பரீட்சை:
***அமைச்சின் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை:**
புலமைப் பரிசிலுக்கான தகைமையை மதிப்பீடு செய்தல்
↓
கட்டம் IV
நீங்கள் புலமைப்பரிசிலுக்கான தகைமைகளைக் கொண்டுள்ளீர்களா எனப் பரீட்சித்தல்
↓
இனங்கண்டு கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பத்தை அனுப்பி குறித்த பல்கலைக்கழகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதி தொடர்பான நடைமுறையைப் பின்பற்றவும்.
↓
தெரிவு பற்றிய கடிதத்தை (Placement Latter) இந்த அமைச்சுக்கு சமர்ப்பிக்கவும்
↓
பிணைமுறி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு புலமைப்பரிசிலைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
↓
உங்கள் கற்கை நடவடிக்கைகளை சிறப்பாகப் பூர்த்திசெய்து அமைச்சுக்கு அறிக்கைப்படுத்தவும்.
↓
தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான அறிவைப் பெற்று மீண்டும் வாருங்கள்.

### 3. தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படை நிபந்தனைகள்:

**விண்ணப்பதாரிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்**

I. இலங்கைப் பிரஜையாக இருத்தல்

II. விண்ணப்பதாரி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட **க.பொ.த. உயர் தரம்-** 2024பரீட்சையில் பொது வினாத்தாளில் குறைந்தது **30%**புள்ளிகளையாவது பெற்றிருத்தல் வேண்டும்.

III. ஆங்கில மொழியில் சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். (க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் பொது ஆங்கில மொழியில் குறைந்தது **“C”**தரச் சித்தியை அல்லது அதற்கு சமமான தகைமையைப் பெற்றிருத்தல்)

IV. சிறந்த உடலாரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு கற்கை காலப்பகுதியினுள் வெளிநாட்டில் (குறித்த நாட்டில்) வசிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

### 4. புலமைப்பரில் மூலம் உள்ளடக்கப்படுகின்ற பகுதிகள்:

இந்தப் புலமைப்பரிசில் கீழ் குறிப்பிடப்படும் பகுதிகளை உள்ளடக்குவதுடன், (உச்சளவாக 4 வருடங்களுக்குரியதாகும்):

I. பாடநெறிக் கட்டணம் மற்றும் ஏனைய கற்கைக் கட்டணங்கள்

II. உணவு மற்றும் தங்குமிட செலவுக்கான மாதாந்தப் படி

III. மருத்துவக் காப்புறுதிக்கான பங்களிப்பு

IV. அருகிலுள்ள விமான நிலையத்திலிருந்து குறிப்பிட்ட பல்கலைக்கழகம் வரை உள்ளக போக்குவரத்து உட்பட, ஒரு முறை செல்வதற்கு மற்றும் திரும்பி வருவதற்கான சிக்கன வகுப்பு விமான டிக்கட் கட்டணம்

ஒரு வருடத்திற்கான புலமைப்பரிசில் தொகையின் பெறுமதி உச்சளவாக 20,000,000 ரூபா (இருபது மில்லியன் ரூபாய்) ஆகும். எவ்வாறாயினும், விண்ணப்பதாரியின் கல்வித் திறமைகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட கற்கைத் துறையைக் கருத்திற்கொண்டு, ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படும் புலமைப்பரிசில் தொகை அமைச்சினால் தீர்மானிக்கப்படும். உலகளாவிய ரீதியில் முன்னேறிவரும் துறைகளில் கற்பவர்களுக்கு முக்கியமாக நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கான சாத்தியங்களைக் கொண்டுள்ள துறைகளில் கற்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### 5. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

I. இந்தத் திட்டத்தினூடாக ஆரம்பப் பட்டப் படிப்பை பயில்பவர்களுக்கு மாத்திரம் நிதியுதவி வழங்கப்படும்.

II. தமது ஆரம்பப் பட்டப் படிப்பை பூர்த்தி செய்ததன் பின்னர் விண்ணப்பதாரிகள் மீண்டும் இலங்கைக்கு வரல் வேண்டும்.

III. இந்தத் திட்டத்தினூடாக உச்சளவாக 4 கல்வியாண்டுகளுக்காக நிதியுதவி வழங்கப்படும்.

IV. இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்படும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களைத் தெரிவு செய்துகொள்வதற்கு பலமாக விண்ணப்பதாரிகள் ஊக்குவிக்கப்படுவார்கள். தயவுசெய்து UGC இணையதளத்தை (https://www.ugc.ac.lk/) பரிசீலிக்கவும்..

V. இலங்கையின் தொழில் நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்படும் பட்டப் பாடநெறிகளைத் தெரிவு செய்துகொள்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

VI. இந்தப் புலமைப்பரிசில் திட்டத்திற்காக தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நிலவுகின்ற அரச பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்வதற்கான செயன்முறைக்கு கவனத்திற்கொள்ளப்பட மாட்டார்கள்.

VII. புலமைப்பரிசிலுக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் கற்கை நடவடிக்கைகளை நிறைவுசெய்து இலங்கைக்கு மீளத் திரும்புவதற்கு மற்றும் நாட்டின் பொருளாதார விருத்திக்கு மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்திக்கு பங்களிப்பைச் செலுத்துவதற்கான அவர்களின் முறையான விருப்பத்தை (இணக்கப்பாட்டை) தெரிவித்து இந்த அமைச்சுடன் பிணைமுறி உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.

VIII. புலமைப்பரிசிலானது தெரிவு செய்யப்பட்ட பட்டப் பாடநெறிக்கான காலப்பகுதியைமாத்திரம் உள்ளடக்குவதுடன், அந்தக் காலப் பகுதியின் பின்னர் நீடிக்கப்பட மாட்டாது.

IX. தெரிவு செய்யும் செயன்முறை நிறைவு பெற்றதன் பின்னர் புலமைப்பரிசிலை நிராகரிக்கும் எந்தவொரு விண்ணப்பதாரியும் இந்த அமைச்சினால் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற எந்தவொரு புலமைப்பரிசிலுக்கும் கவனத்திற்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ள மாட்டார்.

X. எழுத்து மூலமாக அல்லது வாய்மொழி ஊடாக மேற்கொள்ளப்படும் எந்த விதத்திலான அழுத்தமும் புலமைப்பரிசிலுக்கு தெரிவு செய்யப்படாதிருப்பதற்கான காரணமாகலாம்.

XI. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் பொய்யான அல்லது தவறான தகவலும் செயன்முறையின் எந்தவொரு கட்டத்திலும் தகைமையற்றவராகுவதற்கு காரணமாகலாமென்பதோடு, அது புலமைப்பரிசிலை இரத்துச் செய்வதற்கு மற்றும் புலமைப்பரிசில் தொகையை மீளச் செலுத்த வேண்டியேற்படுவதற்கு காரணமாகலாம்.

**செயலாளர்**
**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**
**உயர் கல்விப் பிரிவு, இலக்கம்: 18, வோட் பிளேஸ்,**
**கொழும்பு07.**